(b) if so, the details thereof; and

(c) the steps taken by the Government in this regard?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) ஆம்.

(இ) & (உ) : வியாசர்பாடியில் வடசென்னை புறநகர் திட்டத்தின்கீழ் சாலை அமைக்க, சம்பந்தப்பட்ட உதவிப் பொறியாளரும், பிரிவு அலுவலரும் ஏற்கனவேயுள்ள ஒப்பந்தத்தின்படி ஒப்பந்ததாரரே அமைக்கவேண்டிய 12 அடி அகலத்திற்குப் பதிலாக 18 அடி அகல சாலையை அமைக்கவும், அதிகப் படியான அகலத்திற்கான பணத்தை வேறு ஒரு ஒப்பந்தக்காரர் மூலம் பெறவும் அனுமதியளித்துள்ளனர் என்பது குற்றச்சாட்டு. இக் குற்றச்சாட்டு புலனாய்வில் இருக்கிறது. சம்பந்தப்பட்ட உதவிப் பொறியாளரும், பிரிவு அலுவலரும் தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

முளப்பாக்கம் வீட்டுவசதித் திட்டம்

*** 540 வின—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசுப் பணியாளர்களுக்காக மாயூரம் தாலுக்கா முளப்பாக்கத்தில் வீட்டு வசதி வாரியத்தின் மூலம் வீடுகள் கட்டித்தரும் திட்டம் எந்த நிலையில் உள்ளது ?

(இ) அத்திட்டத்தின் மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு ?

(உ) எவ்வளவு வீடுகள் கட்டித் தரப்படும் ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) அரசுப் பணியாளர்களுக்காக மாயூரம் தாலுக்கா முளப்பாக்கம் கிராமத்தின் அருகிலுள்ள மன்னம்பந்தல் என்னுமிடத்தில் வீட்டு வசதி வாரியத்தினால் எடுக்கப்பட்டுள்ள வாடகை குடி யிருப்புகள் கட்டும் வேலை கட்டிடத்தளம் வரை வந்துள்ளது.

(இ) ரூ. 12.80 லட்சம்.

(உ) 72 குடியிருப்புகள்.

திரு. என். கிட்டப்பா : இந்தக் குடியிருப்புகளை மேலும் அதிகமாக்கித் தர ஏதாவது கோரிக்கை கொடுத்துள்ளார்களா ? அதுபற்றிப் பரிசீலனை செய்யப் பட்டுள்ளதா ?